# கரூர் மாவட்டம்

# புன்செய்ப்புகழூர் தேர்வு நிலை பேரூராட்சி

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010-2011

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

**ந.க. எண்: 7 / 2010** **நாள் : 16.06.2010**

கரூர் மாவட்டம் புன்செய்ப்புகழூர் தேர்வு நிலை பேரூராட்சியில் **அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 2010-2011** ஆம் ஆண்டிற்கு கீழ்குறிப்பிட்ட பணிகளை செய்து முடிப்பதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து **09.07.2010 ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை** (அலுவலக நேரப்படி) பேரூராட்சி செயல்அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **அன்று பிற்பகல் 3.30 மணி அளவில்** (அலுவலக நேரப்படி) வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். பணிகள் விவரம் பின்வருமாறு.

## வேலைகள் விபரம்

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010-2011

(ஒப்பந்தப்புள்ளி படிவ தொகை மற்றும் டேவணித்தொகை **Executive Officer, Town Panchayat, Punjai Pugalur** என்ற பெயருக்கு வேலாயுதம்பாளையம் / கரூர் கிளைகளில் மாற்றத்தக்க வங்கி வரைவோலையாகவோ அல்லது ரொக்கமாகவோ அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.)

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) | ஒப்பந்தப் புள்ளி நமூனா விலை (ரூ) | டேவணித் தொகை 2% (ரூ) | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | புகழூர் இரயில்வே நிலைய சாலை முதல் மூலிமங்கலம் சாலை(ஸ்வீப்பர் காலனி சாலை) வரை தார் சாலை அமைத்தல் | 1160000 | 6000+240 | 23200 | 60 நாட்கள் |
| 2. | நாணப்பரப்பு சாலை கக்கன் காலணி முன்புறம் அனைத்து வசதிகளுடன் கூடிய சமுதாய கூடம் அமைத்தல் | 1450000 | 6000+240 | 29000 | 150 நாட்கள் |
| 3 | வேலாயுதம்பாளையம் உழவர் சந்தை எதிர்புறம் பொது கழிப்பிடம் கட்டுதல் | 350000 | 1500+ 60 | 7000 | 120 நாட்கள் |
| 4 | நாணப்பரப்பு மாரியம்மன் கோவில் அருகில் பொது கழிப்பிடம் கட்டுதல் | 350000 | 1500+ 60 | 7000 | 120 நாட்கள் |
| 5 | புகழூர் கக்கன் காலணி தெருக்களை சிமெண்ட் சாலைகளாக அமைத்தல் | 600000 | 3000+ 120 | 12000 | 60 நாட்கள் |
| 6 | வேலாயுதம்பாளையம் புகழூர் ரயில்வே நிலைய சாலையில் அமைந்துள்ள வாரச்சந்தை முன்புறம் வணிக வளாகம் கட்டுதல் | 1060000 | 6000+240 | 21200 | 150 நாட்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | கந்தம்பாளையத்தில் உள்ள மயானத்தில் எரிமேடை, காத்திருப்போர் கூடம், சிமெண்ட் சாலை மற்றும் சுற்றுசுவர் அமைத்தல் | 500000 | 3000+ 120 | 10000 | 120 நாட்கள் |
| 8 | புகழூர் செம்படாபாளையத்தில் நாடக மேடை அமைத்தல் | 600000 | 3000+ 120 | 12000 | 150 நாட்கள் |

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை புன்செய்ப்புகழூர் தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவங்களுக்குண்டான தொகையை அட்டவணையில் கண்டுள்ளவாறு ரொக்கமாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ செலுத்தி (திருப்பிதரத்தக்கதல்ல) **08.07.2010 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.45 மணி வரை** பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிக்கான டேவணித் தொகையை செயல் அலுவலர் புன்செய்ப்புகழூர் தேர்வு நிலை பேரூராட்சி என்ற முகவரிக்கு வேலாயுதம்பாளையம் / கரூர் கிளைகளில் மாற்றத்தக்க வங்கி வரைவோலையாகவோ அல்லது புன்செய்ப்புகழூர் பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாகவோ செலுத்தப்பட வேண்டும்.

மேலும் **ரூ.5.00 இலட்சத்திற்கு மேல் ரூ.10.00 இலட்சம் வரை மதிப்பீட்டில் உள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை "http://tntownpanchayats.org" என்ற இணையதளத்தில் இருந்தும் ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் மதிப்பீட்டில் உள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை "http://www.tenders.tn.gov.in"** என்ற இணையத்தில் இருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் போது ஒப்பந்தப்புள்ளி படிவங்களுக்கான தொகையை ரொக்கமாக செலுத்த வேண்டும்.

## ***<u>ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்</u>***

1. ஒப்பந்தப்புள்ளிகள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகள் 2000(அரசாணை 445/நிதித்துறை/நாள் 25.09.2000 மற்றும் அரசாணை 446/ நிதித்துறை/ நாள் 25.09.2000)படி பணிகள் செய்து முடிக்க வேண்டும்.

2. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட முன்வைப்புத்தொகை செலுத்திய இரசீது இணைக்கபடாத ஒப்பந்தப்புள்ளிகளும் குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3. செலுத்தப்படும் முன்வைப்புத் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படமாட்டாது. முன்வைப்புத் தொகை வங்கி வரைவோலை மூலமாகவோ ரொக்கமாகவோ செலுத்தப்படவேண்டும்.

4. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

5. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள்அதற்குரிய படிவத்தில் **ரூ.50/-** மதிப்புள்ள முத்திரைத்தாளில் (ஸ்டாம்பு பேப்பரில்) உடன்படிக்கை ஒன்று எழுதித்தர வேண்டும்.

6. திட்டப்பணிகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்கப்படே வண்டும். தவறும் பட்சத்தில் பொறியியல் நடைமுறை நூலில் குறிப்பிட்டுள்ளபடி வேலை ஆணையில் குறிப்பிட்டுள்ள தினங்களுக்குள் பணி முடிக்கப்படாத பட்சத்தில் 5 சதவிகிதம் அபாராத தொகையினை பட்டியல் வழங்கப்படும் போது பிடித்தம் செய்யப்படும். அல்லது செலுத்திய முன்வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்பட்டு வேலை ஆணை ரத்து செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும். இதனால் ஏற்படும் அனைத்து இழப்புக்கும் ஒப்பந்ததாரர்களே பொறுப்பாவார்கள்.

7. சாலை வேலைகளை பொறுத்த வரையில் கிராவல் மற்றும் ஜல்லி சேகரத்திற்கு மட்டும் தொகைபட்டுவாடா செய்யப்பட மாட்டாது. பரத்தல் வேலையை நல்ல முறையில் செய்து வேலையை முழு அளவில் முடித்த பின்னர் தான் முழுத்தொகையும் பட்டுவாடா செய்ய இயலும்.

8. மேற்படி திட்டத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளபடும் பொழுது ஒவ்வொரு நிலையிலும் பணியின் தரம் உறுதி செய்யப்பட வேண்டும்.

9. தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியலை தணிக்கை செய்யப்பட்டு தணிக்கையில் தடை ஏதும் இல்லை என முடிவு தெரிந்த பின்னர் தான் அவ்வேலைக்காக ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்ட முன்வைப்புத் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பி கொடுக்கப்படும்.

10. வேலைகள் சம்மந்தமாக அவ்வப்பொழுது அரசினால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்ததாரர்கள் வேலையை செய்ய வேண்டும்.

11. **வேலை உத்திரவு வழங்கும்பொழுது செய்யப்படும் வேலையின் மதிப்பீட்டிற்கு கட்டிட தொழிலாளர் நலநிதி 0.3 சதவீதம் வங்கி வரைவு மூலம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.**

12. திட்டப்பணிகளுக்கு திட்ட மான்யம் பெறப்பட்டவுடன் பட்டியல் தொகை வழங்கப்படும்.

13. இப்பணி குறித்த பொருள்கள் மாவட்ட ஆட்சித்தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட விலையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கொள்முதல் செய்ய வேண்டும்.

14. **ரூ. 5.00 லட்சம் மற்றும் அதற்கு மேல் மதிப்புள்ள பணிகளுக்கு மூன்றாம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் தகுதியுள்ள ஒப்பந்ததாரர்கள் மட்டுமே கலந்து கொள்ள இயலும். மேலும் ரூ. 5.00 லட்சத்திற்கு மேல் மதிப்புள்ள பணிகளுக்கு தகுதி வாய்ந்த தொழில் நுட்ப உதவியாளர் பணியில் அமர்த்தப்பட வேண்டும். ஒப்பந்ததாரர் அதற்கான சான்றிதழ் நகலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.**

15. அனைத்துப் பணிகளுக்கும் இறுதிப் பட்டியலில் 5 சதவிகித தொகை பிடித்தம் செய்யப்படும். தணிக்கை முடிவுற்றபின் தடை ஏதும் இல்லாது இருப்பின் உரிய முன்வைப்புத் தொகை விண்ணப்பம் பெற்று வழங்கப்படும்.

16. **ஒப்பந்தப்புள்ளிகள் கொடுப்பதற்கு தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் அவர்களது பெயரில் தற்பொழுது ஒப்பந்தம் கோரும் பணியை போன்ற பணியின் மதிப்பில் பாதி அளவில் கட்டாயம் பணி செய்திருக்க வேண்டும். அதற்கான பணி விபரம் சமர்ப்பிக்க வேண்டும்.**

17. **கடந்த 5 ஆண்டுகளில் ஏதேனும் இரண்டு நிதி ஆண்டுகளில், ஒப்பந்தப்புள்ளி கோரும் மொத்த மதிப்பில் 2½ மடங்கு மதிப்புள்ள பணியை ஒரே பட்டியலில் (Final Bill) செய்து முடித்திருக்க வேண்டும். அதற்கான சான்று சமர்ப்பிக்க வேண்டும்.**

18. பட்டியல் தொகை வழங்கப்படும் பொழுது வருமானவரி மதிப்பு கூட்டுவரி கட்டுமான சந்தா தொகை மற்றும் கூடுதல் டேவணித்தொகை பிடித்தம் செய்யப்படும்.

19. பணிகள் நடைபெறும் இடத்தில் பணி பற்றிய விபரங்களை தெரிவிக்கும் விளம்பர பலகை வைக்கப்படவேண்டும்.

20. பணி துவங்கும் முன்னரும், பணி நடைபெறும் பொழுதும், பணி முடிவுற்ற பின்னரும் வண்ணப் புகைப்படங்கள் எடுத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

21. வேலைக்கு பயன்படுத்தப்படும் அனைத்து பொருட்களையும் ஒப்பந்ததாரர்கள் தங்கள் சொந்த பொருப்பில் வாங்கி பயன்படுத்தப்படவேண்டும். அவ்வாறு வாங்கப்படும் பொருட்கள் தரம் மற்றும் அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவுகோளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். தரத்தை குறித்த தேவையான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

22. தார் சாலை மற்றும் கட்டிடம் அமைக்கும் பணிகள் ஒப்பந்ததாரர் பணியினை முடிக்கும் நாளில் இருந்து ஒரு வருடம் முடியும் வரையில் ஏற்படும் அனைத்து பராமரிப்பு பணிகளையும் தன் சொந்த செலவிலேயே மேற்கொள்ளுதல் வேண்டும். அதற்கான கூடுதல் வைப்புத்தொகை மேற்படி மதிப்பீட்டில் 5 சதவிகிதம் செலுத்தப்படவேண்டும்.

23. மற்ற நிபந்தனைகள் மற்றும் விபரங்களை வேலை நாட்களில் அலுவலகத்தில் நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

செயல் அலுவலர்,
புன்செய்ப்புகழூர் தேர்வு நிலை பேரூராட்சி,
கரூர் மாவட்டம்.

<u>பெறுநர் :</u> புன்செய்ப்புகழூர் தேர்வு நிலை பேரூராட்சியில் பதிவு செய்துள்ள அனைத்து ஒப்பந்ததாரர்கள்.

<u>நகல் :</u>

**01)** தலைவர், துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள், புன்செய்ப்புகழூர் தேர்வு நிலை பேரூராட்சி.

**02)** பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை–108 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

**03)** மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஆட்சியரகம், கரூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

**04)** பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

**05)** உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், திண்டுக்கல் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

**06)** உதவி பொறியாளர், காகித ஆலை சிறப்பு நிலை பேரூராட்சி.

**07)** அலுவலக தகவல் பலகைக்கு

**08)** அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள், கரூர் மாவட்டம் தகவலுக்கும் இந்த விளம்பரத்தை தங்கள் அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்யவும் அனுப்பி வைக்கப்படுகிறது.

**09)** **மற்றும் சம்பந்தப்பட்ட கோப்புகளுக்கு.**